REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: பங்குனி 13உ சனி (26—3—55) ★ ★ வெளியூர்: பங்குனி 14உ ஞாயிறு (27—3—55) [இதழ் 243

ஒரிசாவிற்கு சென்னை 'நர்சுகள்'

புவனேசுவரம், மார்ச் 24—

சென்னை மாநிலத்தைச் சேர்ந்த பெண் மருத்துவர்களையும் (லேடி டாக்டர்கள்), 'நர்சு'களையும், ஒரிசா மாநிலத்தில் தற்காலிக மாக வேலைக்கு நியமித்துக் கொள்வதுபற்றி ஒரிசா மாநில சர்க்கார் பரிசீலித்து வருவதாகத் தெரிகிறது.

"நர்சுகள், டாக்டர்கள் பயிற்சிக்கு தேவையான அளவுக்கு ஒரிசா பெண்கள் முன்வராததினால் ஏற்பட்ட 'நர்சுகள் பஞ்சத்தின்' காரணமாகவே இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன," என்ற தகவலை மாநில உதவி சுகாதார அமைச்சர் திருமதி வசந்தமஞ்சரி தெரிவித்துள்ளார்.

தென்னகத்தை வஞ்சிக்கச் சதியா?

இரண்டாவது திட்டத்தைக் கட்டுப்படுத்த வட நாட்டார் தீர்மானம்

தீர்மானத்திற்கு தென்னக உறுப்பினர் சிலர் எதிர்ப்பு

'அலட்சியம் நீடிக்குமானல் தென்னாட்டு மக்கள் பிரிந்துவிடுவர்'

இந்தியப் பேரரசிற்கு அன்னி மாஸ்கரைன் அம்மையார் எச்சரிக்கை

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செயலாற்ற மேற்கொள்ளப்படும் நீர்ப்பாசன அமைப்புகள் அனைத்திலும், குறைந்த செலவில் உடனடியாக நற்பயனைக் கொடுக்கக் கூடிய அமைப்புகளுக்கே முதற் சலுகை தர வேண்டும்."

—இத்தீர்மானத்தை ஜமீலான் சின்ஹா என்ற வடநாட்டு உறுப்பினர் மக்கள் சபையில் பிரரேபித்தார்

இத்தீர்மானத்தை எதிர்த்த அன்னி மாஸ்கரைன் என்ற உறுப்பினர், இந்தியப் பேரரசிற்குத் தென்னகம் ஆண்டுதோறும் செலுத்திவரும் பெரும் வரித் தொகையைப் புள்ளி விவரத்துடன் எடுத்துக் காட்டி, அதற்கேற்ப அதற்குரிய பங்கு, பலவித அபிவிருத்தி ஏற்பாடுகளில் தென்னாட்டிற்கு வழங்கப்படவில்லை எனக் குறிப்பிட்டார்.

"முதல் திட்டத்தில் நடத்தப்பட்டதுபோன்றே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் தென்னாடு நடத்தப்படுமானல், தென்னாட்டு மக்கள் இந்தியப் பேரரசிலிருந்து நிச்சயமாகப் பிரிந்துவிடுவர்," என மாஸ்கரைன் ஆணித்தரமாக அறிவித்தார்.

அம்மையாரைத் தொடர்ந்து, தென்னக உறுப்பினர்களான டாக்டர் கங்காதர் சிவா, பி. இலட்சுமையா, சுரேஷ் சந்திரா ஆகியோர் பற்பல நீர்ப்பாசன ஏற்பாடுகளை தெற்கில் மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தினர். முதல் இரண்டு உறுப்பினர்களும் இராயலசீமாவின் பஞ்சப்பிரதேசங்களைக் குறித்து விளக்கிப் பேசினர்.

ஆனல், ஐதராபாத்தைச்சேர்ந்த சுரேஷ் சந்திராவோ, தெற்கு வஞ்சிக்கப்படுவதை தெளிவுபடுத்தியதுடன், இரண்டாவது திட்டத்திலும் தெற்கு புறக்கணிக்கப்படுமானல், அதைத் தொடர்ந்து சில அரசியல் விளைவுகள் நிகழக்கூடும் என இந்தியப் பேரரசை எச்சரித்தார்.

தீர்மானத்தின் உணர்வு தீமை பயப்பதாக இல்லையானலும், தீர்மானம் ஒப்புக்கொள்ளப் பட்டால், குறிப்பிட்ட சில விஷயங்களில் மக்கள் சபையைக் கட்டுப்படுத்துவதாக மேற்படி தீர்மான சொற்கள் உள்ளன. எதற்கு முதற் சலுகை காட்ட வேண்டுமேன் பதில் ஏற்கனவே ஒரு வழியைச் சுட்டிக் காட்டி இருக்கிறது திட்டக் குழு.

மேற்படி தகவலை நீர்ப்பாசன, மின்சார துணை மந்திரி ஜே. எஸ். அத்தாய் அறிவித்ததின்பேரில், தீர்மானம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

'மடிபிச்சை' கேட்கின்றனர்!

சென்னை, மார்ச் 25—

மத்திய தர வகுப்பினருக்கு வீடுகள் கட்டுவதற்கு வேண்டிய மனைக்கட்டு நிலங்களை வாங்கி, அபிவிருத்தி செய்வதற்காக மத்திய சர்க்காரிடம் குறைந்தவட்டியில் 3 ஆண்டுகளில் திருப்பித்தரக் கூடிய கடனாக ரூ 20 இலட்சம் கோருவதென 'சென்னை அபிவிருத்தி டிரஸ்ட்' தீர்மானித்திருக்கிறது.

சேரி ஒழிப்புக்காக, சென்னை நகரசபை கோரிய ரூ 4 கோடியை சர்க்கார் நிராகரித்ததைக் குறிப்பிட்டு, சேரி ஒழிப்புக்குக் 'கணிசமான' அளவு உதவி மானியம் தரப்படவேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்பட்டது

'தரிசனம்' பெற 'தவம்' இருந்த இளைஞர்!

ஏமாற்றத்தால் தற்கொலை செய்து கொண்டார்

அகமதாபாத், மார்ச் 24—

இந்து மதத் தத்துவங்களில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவராய், ரிஷிகள், சாதுக்கள் ஆகியோரைப் பற்றிய புராதன—புராணக் கதைகளில், மனம் லயித்தவராய் ஒரு இளைஞர், 'மகாதேவப் பிரபு'வை தரிசித்து விட எண்ணி, நான்கு தினங்கள் தொடர்ந்து மந்திரங்களை ஜெபித்துக்கொண்டிருந்தார்.

ஆனல், பக்தர்களின் ஆசைகளைப் பூர்த்தி செய்வதற்கு முன், அந்த மகாதேவப் பிரபு நிறைய சோதனை செய்வார் என்று புராணங்களில் கூறப்படுகிறதாம்; அவர், அந்த இளைஞனின் தவங்கண்டு திருப்திகொள்ளவில்லை என்று தெரிகிறது.

"நான், மகாதேவப் பிரபுவின் 'தரிசனம்' பெற முடியாமற் போய்விட்டதால் என் உயிரை மாய்த்துக் கொள்ளுகிறேன்," என்ற ஒரு கடிதத்துடன், போலீசார், அந்தக் கோவில் வாசலில் அந்த இளைஞனின் பிணத்தைக் கண்டனர்!

மருத்துவக் கல்லூரி மாணவர்கள் வேலை நிறுத்தம்

800 பேர் பங்கு பெற்றுள்ளனர்

கல்கத்தா, மார்ச் 24—

இங்குள்ள தேசிய மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த சுமார் 800-மாணவர்கள், பெண்களுக்கென தனி மாணவர் விடுதி, பொது அறை, சிற்றுண்டிச் சாலை ஆகியவை தேவை என்று கூறி கடந்த புதன் கிழமை முதல் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

கல்லூரியுடன் இணைந்துள்ள சித்தரஞ்சன் ஆஸ்பத்திரி, மருத்துவப் பள்ளி ஆஸ்பத்திரி ஆகிய இரண்டிலும் அவர்கள் வேலை செய்யப் போகாததுடன், வகுப்புகளுக்கும் செல்லாமல் வேலை நிறுத்தம் செய்கின்றனர்.

என்றாலும், மாணவர்கள், அவசரமாக, கவனிக்க வேண்டிய நோயாளிகளைக் கவனிப்பதில் அக்கறை காட்டி வருகின்றனராம்!

'மீண்டும் அரசியலில் புக விருப்பம் இல்லை'

'காமராசரைத்தான் ஆதரிக்கிறேன்-காங்கிரசை ஆதரிக்கவில்லை'

'கம்யூனிஸ்டு கட்சியைத் தோற்கடிக்க உப தேர்தலில் காங்கிரசை ஆதரித்தேன்'

'மெயில்' நிருபருக்குப் பெரியார் கூறிய விளக்கம்

"சென்னை சட்டசபைக்கு குடியாத்தம் தொகுதியில் காமராசர் தேர்தலுக்கு நிற்பதாக எனக்கு அறிவிக்கப்பட்டது; காமராசரை ஆதரிப்பதினால், ஆச்சாரியாரின் செல்வாக்கிழந்த புதிய கல்வித் திட்டம் தொலைந்துவிடும் என நம்பினதினால், அவரை நான் தேர்தலில் ஆதரிப்பது எனத் தீர்மானித்தேன்;

"அதுபோன்றே, தஞ்சையிலும், திருநெல்வேலியிலும் நடைபெற்ற சட்டசபைத் துணைத் தேர்தல்களில் காங்கிரஸ் அபேட்சகர்களைக் கழகம் ஆதரித்தது. இதற்குக் காரணம், கம்யூனிஸ்டுக் கட்சியினரைத் தோற்கடிக்க வேண்டும் என நாங்கள் விரும்பியதேயாகும்; அதில் நாங்கள் வெற்றியும் பெற்றோம்."

—இவ்வாறு பெரியார் அவர்கள், சென்னை 'மெயில்' நிருபரிடம் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

"அதற்கு முன் நானும், காமராசரும் சந்தித்தது கிடையாது. காமராசரை குடியாத்தம் தேர்தலில் ஆதரித்ததினால், நான் காங்கிரசை ஆதரிக்கிறேன் என்று தவருகப் புரிந்துகொள்ளக்கூடாது.

"அடிக்கடி கூட்டங்களில், நான் காமராசரை ஆதரிக்கிறேனு என்று கேட்கப்படுகிறது; சந்தேகமற எனது விடை, 'ஆம்,' என்பதுதான்; பலனைக்கொண்டு மதிப்பிட்டோமா, தகுதியுடையவர்கள் உயர்ந்த பதவிகள் தரப்படுகின்றனர்; இல்லாவிடில் அவை, சமது எதிரிகளுக்குக் கிடைத்திருக்கக் கூடும்; இதுதான் உண்மையான நிலை."

காமராசருடன் செய்துகொண்டுள்ள முன்னேற்பாட்டின்படிதான், காமராசர் ஆட்சியை, தான் ஆதரிப்பதாக உலவும் வதந்தியை அவர் மறுத்தார்; 'அத்தகைய முன்னேற்பாடு எதும் இல்லை,' என்றும் அவர் கூறினர்.

திராவிட சட்டசபைக் கட்சியினர் சந்திப்புப் பற்றிக் கேட்டபோது, பெரியார் அவர்கள், "திராவிட கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய இரண்டையும் பின்பு ஒன்ருக இணைப்பதற்காக உள்ள குழுவின் உறுப்பினர்கள் அவர்கள் என்பது எனக்குத் தெரியும்," என்றும் குறிப்பிட்டிருக்கிறர்.

'பெரியார் காமராசரை ஆதரிப்பது, காங்கிரசை ஆதரிப்பதற்குச் சமமானதே,' என்று கருதப்படுவதாக அந்த உறுப்பினர்கள் தன்னிடம் கூறியதாகவும், பெரியார் அவர்கள் தெரிவித்திருக்கிறர்.

"சட்டசபையில், ஆட்சியிலிருக்கும் கட்சிக்கு ஒரு நல்ல எதிர்க் கட்சி இருக்க வேண்டாமா!" என்று கேட்கப்பட்டபோது, "எதிர்க் கட்சி தேவை என்பதை ஒப்புக் கொள்கிறேன்; ஆனல், ஒரு நல்ல ஒழுங்குமுறையான கட்சிதான் அம்மாதிரி எதிர்க்

(4-ம் பக்கம் பார்க்க)

காதல் மணம் - கண்டு சீற்றம்

கத்திகுத்தால் ஒருவர் மரணம்

கோட்டயம், மார்ச் 25—

ஈழுவர் சமுதாயத்தைச் சேர்ந்த இலட்சுமி என்ற ஒரு பெண், பௌலூஸ் என்ற ஒரு கிறித்தவ இளைஞரைக் காதலித்தார்; இருவரும் பதிவு முறையில் தம்பதிகளாயினர்.

இவர்களது காதல், கலப்பு மணம் இரு சாராரது உறவினர்களுக்கு ஆத்திரமூட்டியதாம்.

விளைவு? மணமகனுக்குச் சொந்தக்காரரான யோகானன் என்பவர், பலத்த கத்திக்குத்துக்காளாகி, இறந்துபட்டார் என்றும், பலர் படுகாயம் பட்டனர் என்றும் தெரிய வருகிறது.

காயம்பட்டோர் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனராம்.

விவசாயிகளுக்கு உர வினியோகம்

40 லட்சம் டாலர் அமெரிக்க உதவி

புதுடில்லி, மார்ச் 24—

இந்தியாவில், இரசாயன உர வினியோகத்தைப் பெருக்குவதற்கான கூட்டுத் திட்டத்திற்கு அமெரிக்க உதவியைப் பெறுவதற்கான ஒப்பந்தம் ஒன்றில் அமெரிக்காவும், இந்தியாவும் கையெழுத்திட்டுள்ளன என அறிவிக்கப்படுகிறது.

இரசாயன உர உற்பத்தியைப் பெருக்குவதற்கான இந்த அமெரிக்க—இந்தியக் கூட்டுறவு ஒப்பந்தத்தின் கீழ் சுமார் 41,000 டன் இரசாயன உரம் வாங்கி, விவசாயிகளுக்கு வினியோகிப்பதென உத்தேசிக்கப்பட்டுள்ளதென்றும். இத்திட்டத்திற்கு அமெரிக்கா 40 லட்சம் டாலர் உதவுமென்றும், இந்தியா தனது பங்காக ரூ. 12 லட்சம் தருமெனவும் தெரியவருகிறது.

தாராள உதவி!

சிறு தொழில்கள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், மத்திய சர்க்கார் சென்னையிலிருக்கும் விஞ்ஞான கண்ணாடி சாதனங்கள் தயார் செய்யும் பயிற்சி கழகத்திற்கு ரூ. 52,037 மானியமாகவும், கடனாக ரூ 8,500-ம் உதவுவதாகத் தந்துள்ளதாம்.

நம் நாடு

சென்னை 26—3—'55 சனி

புயல் வீசவில்லையாம்!

அகதிகளா? இடம் பெயர்ந்தோரா? 'அங்கே' நீங்கள் பட்ட அவதியை அறிந்தோம் — கேட்டோம் — திடுக்கிட்டோம்—திகைத்தோம்! கொடுமைக்குள்ளானோரே, கொஞ்சமும் கவலை வேண்டாம்! கொதிக்கும் உங்கள் நெஞ்சமுணர்ந்துள்ளோம்; அஞ்சத் தேவையில்லை—'வாழ்விழப் போமோ?' என்று.

வாழ்வுதர, இழந்த சொத்து, சுகங்களைத் திரும்பப் பெற்றுத்தர இதோ, நாங்கள் உங்கள் இனத்தவர் - உறவினர் இருக்கிறோம், உவகையுடன் உங்களை வாழ்விக்கும் நல்ல உள்ளத்தோடு-உயர்ந்தசெல்வாக்கோடு—உரிய அதிகாரங்களோடு! உங்களுக்கேன் கவலை!

சொத்துக்களை விட்டுவந்திரா? இதோ நஷ்டஈடு; சொத்தின் மதிப்பைக் கூறுவீர்!

இங்கே உங்களுக்கு என்ன வேண்டும்? தொழில் செய்து வாழ விருப்பமா? உங்களுக்குத் தொழில் நுணிக்க அறிவும் அனுபவமும் இல்லாவிடின் தான் என்ன; உங்கள் விருப்பத்தைக் கூறுங்கள்—நிறைவேற்றி வைக்கிறோம்.

வர்த்தகம் செய்ய இதோ, வட்டியில்லாக் கடன் கூட அல்ல — இலவச முதலீடு! இட வசதி! வரி விதிப்பு விலக்குச் சலுகை!

துணிக்கடையா?—பிணி போக்கும் மருந்துக் கடையா? விருந்துக்குப் பரிமாறும் பலகாரக் கடையா?—பலசரக்குக் கடையா? எதுவானாலும் இலவசமாகவே வைத்துத் தருகிறோம்; இழந்த வாழ்வைப் பெற்றுக்கொள்ளுங்கள்!

குழந்தைகளுண்டா உங்களுக்கு? அவைகளுக்குக் கல்வி கற்பிக்கவேண்டுமா? கல்லூரியிலா? அதுவும், தொழிற் கல்லூரியிலா? கவலை ஏன்! சடுதியில் உத்திரவிடுகிறோம் —'அகதிகள் குழந்தைகட்கு அங்கு இடம் ஒதுக்குக!' என்று! கல்வி பயில நீங்கள் காசேதும் தர வேண்டாம்; எல்லாம் இலவசம் தான்.

நோய் உங்களை அணுகுகிறதா? மருத்துவ வசதி — எவ்வளவு விலையுள்ளதாயினும் எல்லா உயரிய மருந்துகளுடனும், இலவசமாகவே கிடைக்கும்.

குடியிருக்கவா? நேர்டியில் 'காலனி'கள்—இதோ உருவாகுகின்றனவே, உங்களுக்காகத்தான்.

இத்தனையும் உங்களுக்குக் காத்து கிடக்கின்றன. 'அகதிகளானேம்—வாழ்விழந்தோம்' என்றெண்ணி ஏங்கித் தவிக்காதீர். நீங்கள் இடம் பெயருமுன் பெற்றிருந்தது எப்படிப்பட்ட வாழ்வாயினும், அது துன்பம் நிறைந்ததோ, இன்பம் மிகுந்ததோ எங்களுக்கு கணக்கெடுக்க நேரமில்லை. நீங்கள் அகதிகளா? இடம் பெயர்ந்தோரா? அதுதான் எங்களுக்கு வேண்டும்; அவதிப்பட்ட உங்களை இனி என்றுமே துயரமும் தொல்லையும், தொடராதவாறு பார்த்துக் கொள்ளவேண்டியது எங்கள் பொறுப்பு.

இப்படி பாகிஸ்தானிலிருந்து 'அகதிகள்' என்ற பெயரில் இந்திய எல்லைக்குள் ஓடிவந்த இடம் பெயர்ந்த மக்களுக்கு இங்கு மறுவாழ்வு தருவதில் இந்திய அரசாங்கம் காட்டிவரும் அக்கரை கணக்கற்றது.

அந்த அகதிகளுக்கு வாழ்வு தருவதற்காக, இன்றுவரை இருநூறு கோடி ரூபாய்க்குமதிகமாக இந்தியப் பேரரசு செலவிட்டுள்ளது.

அங்கிருந்து இங்கு ஓடிவருபவர்கள் மறு வாழ்வு பெற வேண்டுமென்பதற்காக, இந்தியப் பேரரசு தன் கையில் சிக்கியிருக்கும் அதிகாரங்கள் எல்லாவற்றையும் செயல்படுத்தி வருகிறது. தனது கஜானாவிலிருந்து செலவு செய்வது மட்டுமின்றி, மாநில 'கஜானா'க்களையும் செலவிட உத்திரவிடுகிறது. அதுவும், அந்த அகதிகளுடன் ஒட்டோ, உறவோ இல்லாத வேறு இன மக்கள் வாழும் தென்னகத்து மாநிலங்களையும், 'கடைவைத்துத் தந்து வாழச் செய்; கல்விச் சலுகை கொடு; வேலை தேடித் தா; தொழில் நிர்மாணித்துக் கொடு' என்றெல்லாம் கட்டளை இடுகிறது.

இவ்வாறெல்லாம், பாகிஸ்தானில் வாழும் இந்துக்கள், 'இங்கு பெறும் வாழ்வைக் காட்டிலும், இந்தியாவில் இன்பம் நிறைந்த வாழ்வு கிடைக்கிறது' என்றெண்ணி இங்கு வசதிகளும், சலுகைகளும, நிரந்தரமான நல்வாழ்வும் கிடைப்பது கண்டு, லட்சக் கணக்கில் ஓடிவந்து கொண்டே இருக்கிறார்கள்; அதுவும், வெகு அதிகமாக, கடந்த சில மாதங்களாய். அத்தனை பேருக்கும் மறு வாழ்வு தர மறுத்ததில்லை, மத்திய அரசாங்கம்.

இந்த நிலைகளை, இங்குள்ள, மக்கள் மட்டுமின்றி, நாட்டின் நாயகர்களும் நன்குணர்ந்தே இருக்கின்றனர் — இருக்க வேண்டும்.

பாகிஸ்தானிலிருந்து ஓடிவருபவர்களில் பெரும்பாலானோர், அங்கு உழைக்காமலேயே வாழ்ந்தவர்கள் என்பதும் எல்லோருமறிந்ததே! அத்தகையோருக்கு, இங்கு—இந்தியாவில் வாழ்வு தரப்படுகிறது.

ஆனால், அவர்களைக் காட்டிலும் அதிகமான அளவு கொடுமைகளைச் சகித்து, குடியுரிமை மறுக்கப்பட்டு, கொத்தடிமை வலையின் கொடுங்கோன்மைக்கு ஆளாகி, 'நாடற்றவர்' என்று இழித்துரைக்கப்பட்டு, துரத்தப்படுபவர்கள், இலங்கை வாழ் திராவிடர். அவர்களுக்கும் 'இந்தியர்' என்ற போர்வை இருக்கத்தான் செய்கிறது.

அப்படி துரத்தப்பட்டு வந்த மக்களுக்கு, இங்கு வாழ்வுதர அரசாங்கம் என்ன செய்திருக்கிறது என்று கேட்டால், நிதியமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் "'நிவாரணம் தேவை' என பெரும் அளவில் கோரிக்கை வரவில்லை; ஆகவே எந்தவித நிவாரணமும் தரப்படவில்லை" என்று கூறியிருக்கிறார் சட்டசபையில்.

இங்கு வாழ்வில்லை என்பதால் இலங்கையில் குடியேறி, மாடாக உழைத்து வயிறு கழுவி வந்த திராவிடர், மீண்டும் வாழ்விழந்து, அல்லலுற்று, அழுத கண்ணும் வேதனையால் விம்மிய நெஞ்சும் கொண்டு துரத்தப்பட்டு ஓடிவருகிறார்கள்; அவர்களை ஓடிச்சென்று வரவேற்று, ஆறுதலும், அவலம் நீங்கிய வாழ்வும் தரவேண்டிய பொறுப்பும் கடமையுமுடைய கனம் மந்திரி அவர்கள், 'நிவாரணம் வேண்டும் என்ற கோரிக்கை வரவில்லை' என்று சாதாரணமாகக் கூறியிருக்கிறார்.

நிவாரணம் தேவை எனக் கேட்கவில்லையாம், துரத்தப்பட்டுள்ள திராவிட மக்கள்! 'எரிமலை குமுறவில்லையே—கடல் கொந்தளிக்கவில்லையே! புயல் வீசவில்லையே!' என்கிறாரா?

அதிகரித்து வரும் அகதிகள் எண்ணிக்கை!

மத்திய மந்திரி விளக்கம்

புதுடில்லி, மார்ச் 24—

மேற்கு வங்கத்தைப் பலப்படுத்துவதற்காகக் கிழக்கு பாகிஸ்தான் இந்துக்களுக்கு நிலம், பணம் போன்ற தூண்டுதல்கள் அளித்து அவர்களை அங்கு குடியேற்றிக் கொள்வதாக பாகிஸ்தான் பத்திரிகைகள் சிலவற்றில் வெளிவந்துள்ள செய்தி பற்றிக்கேட்கப்பட்டபோது, அகதிகள் இலாகா அமைச்சர் மேகர்சந்த் கன்னா, அவையெல்லாம் வெறும் கட்டுக்கதைகள் என்றும், சிலநூறு ரூபாய்களுக்காகவும், ஒரு துண்டுநிலத்திற்காகவும் சொந்த வீடு வாசல்களை விட்டுவிட்டு யாராவது வெளியேறி விடுவது என்று கூறப்படுவது மனவேதனையை அளிக்கிறது என்று குறிப்பிட்டுவிட்டு, 'நானே ஒரு அகதி; சொந்த வீடுவாசல்களை விட்டுப் பெயர்ந்து செல்வது எவ்வளவு கஷ்டம் என்பது எனக்குத் தெரியும்,' என்று கூறினர்.

3 லட்சம் மோட்டார்!

"இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் 1,55,234 சொந்த உபயோகத்துக்கான கார்களும், 38 728 பஸ்களும், 91,425 டிரக்குகளும் உபயோகத்தில் இருந்து வருகின்றன," என்று மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டது.

சென்னை மாநிலத்தில், மொத்தம் 23,227 கார்களும், 6,128 பஸ்களும், 9,319 சரக்குப் போக்குவரத்து டிரக்குகளும் பரிசீலனை மாதத்தில் இருந்தனவாம்!

ராவல்பிண்டி இராணுவச் சதிவழக்கு எதிரிகள் ஜாமீனில் விடுதலை

லாகூர், மார்ச் 24—

ராவல்பிண்டி இராணுவச் சதி வழக்கில் ஈடுபட்டு தண்டனை விதிக்கப்பட்ட 8 எதிரிகளையும் ஜாமீனில் விடுதலை செய்து விடுமாறு லாகூர் உயர்நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

முன்னாள் மேஜர்—ஜெனரல் அக்பர் உட்பட 7 இராணுவ அதிகாரிகளும், பெய்ஸ் அகமது என்பவரும், மேற்கூறிய 8 எதிரிகளாகும்.

பாதாள அணுகுண்டு பரிசோதனை

நான்காண்டுகளுக்குப் பிறகு, முதன் முறையாக ஒரு பாதாள அணுகுண்டு சோதனையை அமெரிக்கா நடத்தியிருக்கிறது.

உத்தியோகத்திற்கு நபர் தேர்ந்தெடுப்பதில் ஊழல்!

பெப்சு மாநில சர்க்காரின் போக்கு குறித்து 'பப்ளிக் சர்விஸ் கமிஷன்' அறிக்கை

பெப்சு மாநில 'பப்ளிக் சர்வீஸ் கமிஷனி'ன் 1952—53-ம் ஆண்டிற்கான அறிக்கை சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்டபோது, அதில், மாநில சர்க்கார், பல உத்தியோகங்களுக்கு கமிஷனைக் கலந்தாலோசிக்காமலேயே, நபர்களைப் பொறுக்கிக்கொண்ட தவறுகள் இடம் பெற்றிருந்தது தெரிய வந்தது.

கமிஷனின் அறிக்கை சபையில் தாக்கல் செய்யப்படுவது இதுவே முதல் முறையாகும்.

உதவி 'கமிஷன'ராக ஒரு அதிகாரிக்கு உத்தியோக உயர்வு, சர்க்காரால், 'கமிஷனி'ன் ஆலோசனை இன்றியே தரப்பட்டது.

கமிஷன் இது குறித்து காரணங்காட்டுமாறு கேட்டு 31 முறை ஞாபகப்படுத்திய பிறகு, இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாகியும் இதுவரை சர்க்கார், உத்தியோக உயர்வு தந்ததற்கான காரணத்தை கமிஷனுக்கு அறிவிக்கவில்லை என்பதும், 'கமிஷனி'ன் அறிக்கையில் காணக்கிடக்கிறது.

இதுபோன்று, இன்னும் பல உத்தியோகங்களுக்கு அதிகாரிகள் தேர்ந்தெடுப்பதில் 'கமிஷனி'ன் ஆலோசனை இன்றியே சர்க்கார் நடந்து கொண்டிருப்பதாயும், பெப்சு மாநிலம் உருவாக்கப்பட்டு நாலரை ஆண்டுக் காலமாகியும், சர்க்காரின் போக்கினுல் ஒரு நல்ல நிர்வாகம் ஏற்பட முடியவில்லை என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

இந்திய மேல் சபையில்......

☆

பட்டதாரிகள் பரிதவிப்பு?

"1954-ம் ஆண்டில் வேலை தேடித்தரும் நிலையங்களில் வேலை உதவிகோரி 499 மருத்துவப் பட்டதாரிகளும், 2,550 எஞ்ஜினீயரிங் பட்டதாரிகளும் பெயர் பதிவு செய்துகொண்டிருந்தனர்; அவ்வாண்டில் 55 மருத்துவப் பட்டதாரிகளும் 512 எஞ்ஜினீயரிங் பட்டதாரிகளும் வேலையில் அமர்த்தப்பட்டனர்" என்று குறிப்பிடப்பட்டது.

இந்திய சர்க்காரில் அலுவலாற்றும் மகளிர்

இந்திய சர்க்காரில், 1953 மார்ச் 1-ந் தேதியன்று மொத்தம் 29,668 பெண் சிப்பந்திகள் வேலை பார்த்து வந்தனர்; 1950-ம் ஆண்டுக்குப் பிறகு, இந்திய நிர்வாக சர்வீசில் 7 பெண்களும், இந்திய சர்க்கார் அயல்நாட்டு சர்வீசில் 3 பெண்களும் வேலை பார்த்து வந்தனர், என்று தெரிவிக்கப்பட்டது.

வருமான வரி ஏய்ப்பு?

வருமான வரி, சூபர் வரி ஆகியவைகளின் பாக்கி, 1953-54 நிதி ஆண்டின் ஆரம்பத்தில் ரூ. 159.3 கோடியாகவும், அந்த ஆண்டின் இறுதியில் ரூ. 169.6 கோடியாகவும் இருந்தது; இது சம்பந்தமாக 11 வழக்குகளை சர்க்கார் தொடர்ந்துள்ளது; மத்திய சர்க்கார் கேட்டுக்கொண்டதற்கிணங்க, சில மாநில சர்க்கார்கள், வரி பாக்கி வசூலைத் தீவிரப்படுத்த, கூடுதலாக அதிகாரிகளையும், இதர சிப்பந்திகளையும் நியமித்திருக்கிறது, என்று அறிவிக்கப்பட்டது.

கைக்குத்தல் அரிசியில் 1-லட்சம் பேர்!

"கடந்த 1952-ம் ஆண்டில் இந்தியாவின் மொத்த கைக்குத்தல் அரிசியின் அளவு 1,20,50,000 டன்னாக இருந்தது—அடுத்த ஆண்டில் 1,29,14,000 டன்னாகவும், 1954-ல் 1,47,64,000 டன்னாகவும் மதிப்பிடப்பட்டுள்ளதென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்றாண்டு காலத்தில் கைக்குத்தல் அரிசி உற்பத்தித் தொழிலில் எத்தனைபேர் ஈடுபட்டிருந்தனர் என்பது பற்றிய சரியான தகவல்களேதும் கிடைக்கப் பெறவில்லையானாலும், அகில இந்தியக் கதர், கிராம கைத்தொழில் குழு 1954-ல், சுமார் ஒரு இலட்சம் பேர் இவ்வேலையில் ஈடுபட்டுள்ளதாக மதிப்பிட்டுள்ளதென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மது ரசம் கலந்த மது வகைகள்!

புதுடில்லி, மார்ச் 24—

மது விலக்குத் திட்டம் அமுலில் நடைபெற்றுவரும் மாநிலங்களில், மது ரசம் கலந்த மருந்துகள் சாராயத்திற்குப் பதிலாக உபயோகிக்கப்படுவதைத் தடை செய்யும் நோக்கத்தில், டெல்லி மக்கள் சபையில் மசோதா ஒன்று பிரரேபிக்கப்பட்டது.

மது ரசம் கலந்துள்ள தயாரிப்புகள் அதிகப்படியாக உபயோகிக்கப்பட்டுவருவதின் விளைவாக மக்களின் தேக ஆரோக்கியம் பாதிக்கப்படுவதாக மதுவிலக்கு மாநிலங்கள் மத்திய சர்க்காரிடம் அறிவித்து, இத்தகைய மது வகைத் தயாரிப்புகளின் இறக்குமதியைத் தடுப்பதற்கான அதிகாரம் தங்களிடம் இல்லாததால் மதுவிலக்கின் அடிப்படை நோக்கம் நிறைவேற முடியவில்லை என்று குறிப்பிட்டதின் பேரில், அரசியல் சட்டத்தின் 302-வது பிரிவுப்படி மத்திய சர்க்காரே இதுபற்றிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் விதத்தில் இம்மசோதா கொண்டுவரப்படுவதாக அந்த மசோதாவின் நோக்கம் பற்றிய பகுதியில் கூறப்படுகிறது.

இம்மசோதாவின்படி மது விலக்கு அமுலில் இருந்து வரும் மாநிலங்களில், மது ரசம் கலந்துள்ள மருந்துகள் போன்ற தயாரிப்புகளை அனுப்புவது கட்டுப்படுத்தப்படுமென்றும் தெரிகிறது.

மேலும், இம்மசோதா, மாநிலங்களிடையே இத்தகைய தயாரிப்புகளின் போக்கு வரத்து, விற்பனை ஆகியவற்றை ஒழுங்குபடுத்தும் விதிகளை இயற்றுவதற்கு மட்டுமல்லாமல், லைசென்ஸ் முறையை ஏற்படுத்துவது, இறக்குமதியின் அளவை நிர்ணயிப்பது போன்ற நடவடிக்கைகளை எடுக்கவும் மத்திய சர்க்காருக்கு அதிகாரம் தருகிறது.

இனிமேல், சாராயச் சத்துக் கலக்கப்பட்ட மருந்துகளோ, அல்லது 'ஒபினு'ம் மருந்தும் கலக்கப் பெற்றுள்ள தயாரிப்புகளோ 'மது ரசத் தயாரிப்பு'கள் என்றுதான் கருதப்படுமாம்.

இம்மசோதாவில் கூறப்பட்டுள்ளபடி, இச்சட்டத்தை மீறுவோருக்கு ஓராண்டுவரை சிறைத் தண்டனையோ அல்லது, ஆயிரம் ரூபாய்வரை அபராதமோ, அல்லது இரண்டும் சேர்த்தோ விதிக்கப்படும் என்றும் தெரிகிறது.

பீடி தயாரிக்கும் சாதனங்கள்

புதுடில்லி, மார்ச் 24—

கையால் சுற்றப்பட்ட பீடிகள், பீடி சுற்றுவதற்குத் தேவையான இலைகள், பீடிக்குத் தேவைப்படும் புகைப் பதம் போடாத புகையிலை ஆகியவைகளை அனுமதி (லைசென்ஸ்) பெற்றுக் கொண்டுதான் ஏற்றுமதி செய்யவேண்டுமென்று இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளதெனத் தெரிய வருகிறது.

ஆனல் இந்த அனுமதி அளவுக் கட்டுப்பாடுகள் எதுவுமில்லாமல் 'தாராளமாக' வழங்கப்படுமாம்.

பொங்கி எழுந்தனர்-பொறுத்தது போதுமென!

—(:)—

எங்கே வாழ்வு? எங்களுக்கேன் இந்தத் தாழ்வு?

தமிழகமெங்கணும் 'ஐந்தாண்டுதிட்ட கண்டனநாள்'

"வடநாடு வாழ்கிறது—வாழவைக்கப்படுகிறது; தென்னாடு தேய்கிறது—தீயவைக்கப்படுகிறது — டெல்லி ஆட்சியினரால்!"

"வட நாடு—,தென்னாட்டை அடிமைகொண்டு அடக்கி ஆள்கிறது; தென்னாடு அடிமைப்பட்டு அவதியுறுகிறது,"

என்ற பேருண்மையை தி. மு. கழகத்தவராகிய நாம்— 'திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்,' எனும் நமது இலட்சியத்திற்கு நாம் காட்டிவரும் எத்தனையோ காரணங்களுள் ஒன்றாக எடுத்துக் காட்டி வருகிறோம்; அதை நிரூபிப்பதற்கு, ஐந்தாண்டுத் திட்டம் என்ற ஒரு திட்டத்தில், வடநாட்டு மக்களின் கண்ணில் வெண்ணெயையும், தென்னாட்டவரின் கண்ணில் சுண்ணாம்பையும் தடவியிருக்கிறார்கள் என்பதே போதுமானது என்று நாம் கூறி வந்தோம்; 'இல்லை' என்று இதை மறுத்துக்கூறியவர் இன்றுவரை இல்லை. ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ளவர்கள் கூட, இலைமறை காய் மறையாக இக்குறைபாட்டைக் கூறியது போய், பகிரங்கமாகவே கூறமுற்பட்டிருக்கின்றனர்; என்றாலும் அவர்கள், 'ஏக இந்தியா' அணைப்பில் சுகம் காண எண்ணுகின்றனர்.

அந்தப் பரிதாபத்திற்குரியவர்களுக்கும், வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகளுக்கும், தென்னாட்டிற்கு முதல் ஐந்தாண்டு திட்டத்தில் செய்யப்பட்ட ஓரவஞ்சனையை இடித்துரைக்கும் வகையில், கடந்த மாதம் பேரூரில் கூடிய தி. மு. கழகப் பொதுக்குழு செய்த முடிவுப்படி, கடந்த 20—3—55 அன்று தமிழகமெங்கும், 'ஐந்தாண்டுத் திட்டக் கண்டனநாள்' சிறப்புற கொண்டாடப்பட்டிருக்கிறது.

கண்டனத்தை பல கழகத் தோழர்களும், பொதுக்கூட்டங்கள் கூட்டி, ஊர்வலங்கள் நடத்தி, தீர்மானங்கள் நிறைவேற்றியும், செயற்குழுக் கூட்டம் கூட்டி தீர்மானம் நிறைவேற்றியும் ஆட்சியாளருக்கும் ஏனையோருக்கும் தெரிவித்துள்ளனர்.

அவைபற்றிய விவரங்கள் சுருக்கமாகக் கீழே தொகுக்கப்பட்டுள்ளன :—

மதுரை

20—3—55ல், ஊர்வலமும், பொதுக் கூட்டமும் சிறப்புற நடைபெற்றது அன்று மாலை 5 மணிக்கு, கட்ரூபாளையம் கழகக் கட்டிடத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டது. ஊர்வலத்தின் முன்னர் 700-க்கு மேற்பட்ட சைக்கிள்கள் செல்ல 5000-க்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு இரண்டு மைல் நீளத்திற்கு ஊர்வலம் திரண்டிருந்தது. மாலை 6½ மணியளவில், திலகர் சதுக்கத்தில் தோழர் எஸ் முத்து தலைமையில் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் தமது உரையில், கூட்டத்தின் நோக்கம் குறித்தும், ஐந்தாண்டுத் திட்ட அநீதி குறித்தும் பேசினார். அடுத்து தோழர் எஸ் அப்பாவு, மதுரைத் தோழர்கள் நடத்திய மகத்தான ஊர்வலத்தைப் பாராட்டியும், ஐந்தாண்டுத் திட்டம் வடநாட்டு மக்களுக்கு எப்படி வாழ்வளிக்கின்றது—தென்னாட்டு மக்களை எப்படி புறக்கணிக்கின்றது என்ற புள்ளிவிபரங்களை எடுத்துக்காட்டிப் பேசியதும், தோழர் ஈ. வி. கே. சம்பத் சிறியதோர் உரை நிகழ்த்தினார். கிளைக் கழகங்கள் சார்பாகத் தோழர்கள் ஈ. வே. கி. சம்பத், எஸ். அப்பாவு ஆகியோருக்குக் கைத்தறித் துணிகள் அணிவிக்கப்பட்டன. பொதுக் கூட்டத்தில் 50,000-க்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர்

சோபனபுரம்

20—3—55-ல், தோழர் எஸ் டி. சீனுவாசன் தலைமையில் நடைபெற்ற செயற் குழுக் கூட்டத்தில், கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடையம்

20—3—55-ல், தோழர் கே. கலைதாசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சாகுல் அமீது, எம். மைனுமகமது ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பள்ளிகொண்டா

(வ. ஆ. மாவட்டம்)

20—3—55 இரவு 7 மணிக்கு, தோழர் பி சி. விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்ற கழக நிர்வாகக் குழுக் கூட்டத்தில், கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

வேலூர் (சேலம்)

20—3—55ல், அண்ணா மன்றச் சார்பில் கண்டன ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடைபெற்றது தோழர்கள் வி. ஏ இலக்குமணன், ஆர். இரத்தினசபாபதி, கே இராசலிங்கம் ஆகியோர் பேசினர்

* * *

19—3—55 மாலை 6 மணிக்கு, வ. உ. சி. திடலில், தோழர் வி. எஸ் சதாசிவம் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் வே. கருப்பையா, வி. ஏ. இராமநாதன், வி கே. இராசு, இரா. சண்முகம் ஆகியோர் பேசியபின், சிற்றுளி சுப்பிரமணியம் 'ஐந்தாண்டுத் திட்டமும், நம் மாநில நிலைமையும்' என்பது பற்றி விரிவுரையாற்றினார்.

சிவகெங்கை

20—3—55-ல், அரண்மனை வாயில் முன்பு, தோழர் கோ. மணவாளன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர் எஸ் எஸ். தென்னரசு சொற்பொழிவாற்றினார்.

அக்கிரெட்டிப்பாளையம்

20—3—55 இரவில், தோழர் அண்ணாமலை தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எஸ் மூக்கன், நாராயணன், கிருஷ்ணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

காதக்கோட்டை

20—3—55 இரவு 7 மணிக்கு சன்னிவாடி ரேடியோ மைதானத்தில், திரு. கே.எஸ் எஸ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் பி சின்னமுத்துசாமி, எஸ். வி. சர்க்கரை, எஸ். எம். கொமாரசாமி, கே. வி. ராஜகோபாலன், எஸ். எம். பழனிச்சாமி, மற்றும் பலரும் பொற்பொழிவாற்றினர்.

கோவை

சிதம்பரம் பூங்காவில், தோழர் எஸ். ஏ. இராசமாணிக்கம் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் இரா. நெடுஞ்செழியன் ஐந்தாண்டுத் திட்டத்தில் வடக்கிற்கும், தெற்கிற்கும் செய்யப்பட்டுள்ள நன்மை தீமைகளை விளக்கி நீண்டதோர் சொற்பொழிவாற்றினார்.

ஆமதாபாத்—சமால்பூர்

20—3—55 மாலை 4 மணிக்கு இங்கு கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ஆர். டி. சலம், பொ. இரத்தினவேலன் சொற்பொழிவாற்றினர்.

உடுமலை

20—3—55 மாலை 7 மணியளவில், நகர தி மு. கழகச் சார்பில், ப்ரேவோ திடலில் தோழர் மு துரை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் வெங்கிடுசாமி, கருப்பணன், தங்கவேலு, க. துரைக்கண்ணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

துறையூர்

20—3—55-ல், அரண்மனை பிள்ளையார் கோவில் முன்பு, தோழர் ஆதிமூலம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் எஸ் ராஜு, டி. பி. அழகமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

அலங்காநல்லூர்
(மதுரை மாவட்டம்)

20—3—55 காலை 10 மணிக்கு தோழர் சின்னசாமி தலைமையில் நடைபெற்ற கழகச் செயற் குழுக் கூட்டத்தில், தோழர்கள் கிருட்டிணன், இளங்கோ, அன்பரசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கவுந்தப்பாடி

20—3—55 இரவு 7 மணிக்கு, சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் மா. சென்ராயன், மா. சுப்பிரமணியம், கதிர்வேல் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

அய்யப்பநாய்க்கன்பட்டி

20—3—55 மாலை 7 மணியளவில், தோழர் சி. கார்மேகம் தலைமையில், தி. மு. கழகக் கிளையான அண்ணா படிப்பகத்தின் சார்பில் ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

கடம்பத்தூர்

20—3—55 இரவில் தோழர் ந. புகழரசன் தலைமையில் நடைபெற்றது. தோழர் க செல்வராசன் சொற்பொழிவாற்றினார்.

பரவை

20—3—55 காலையில், தோழர் கா. மணி தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலத்தின் போது முக்கியஇடங்களில் தோழர் வெ. இராமச்சந்திரன் சொற்பொழிவாற்றினார். ஐந்தாண்டுத் திட்டத்தின்மூலம் தென்னாடு வஞ்சிக்கப்படுவதை பல துண்டறிக்கைகள் மூலம் எடுத்துக் காட்டப்பட்டது

ஒரக்காட்டுப்பேட்டை

20—3—55 மாலை 6 மணிக்கு, தோழர் கு மு இளங்கோ தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் ப. ஆறுமுகம், சோலை க. சுந்தரேசன், எத்துராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

காட்பூர்

20—3—55 காலை 10½ மணியளவில் கழகப் பணிமனையில் தோழர் சி. இராமசாமி தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கருகம்பத்தூர்

20—3—55 காலை 8 மணிக்கு, கண்டன ஊர்வலமும், 9 மணிக்கு, தோழர் வே. அ இளஞ்செழியன் தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் ஆ மணிஎழிலன், கருத்தோவியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கடலங்குடி

19—3—55 மாலை 7 மணிக்கு. தோழர் கே. கே. நீலமேகம் தலைமையில் நடைபெற்ற வேலாயுதம் மன்றத்தின் முதலாண்டு விழாப் பொதுக் கூட்டத்தில், தோழர்கள் சி. பி. சிற்றரசு, கே. ஆர். பாலகிருட்டிணன், செ. இராதாகிருட்டிணன், வே. சந்தானம் ஆகியோர் ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்டித்து சொற்பொழிவாற்றினர்.

சேலம்-செவ்வாய்பேட்டை

20—3—55 மாலை 6½ மணிக்கு, சேலம் 'வி' மார்க்கெட்டில், தோழர் ஜி பி. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன், எஸ். ஏ. அன்புக்கரசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

ஆலங்கோட்டை

20—3—55ல், இவ்வூர் திரு. வி. க. படிப்பகம், தி. மு கழகம் ஆகியவை சார்பில் கண்டன ஊர்வலமும், அன்று மாலை 7 மணியளவில் திரு. வி. க. படிப்பகத்தின் முன்னால் தோழர் வா. ரா. அரங்கையா, தலைமையில் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் கோ காசிநாதன், கா. இரா. செயராமன், தி. சு. இராசமாணிக்கம், க. கோவிந்தராசு, கோ. கருணைக்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சாத்தான்குளம்

20—3—55 இரவு 7½ மணிக்கு கழக அலுவலகத்தில் தோழர் ஆர். இ. பழனி தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழு உறுப்பினர் கூட்டத்தில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதுவை

20—3—55 மாலை 6 மணிக்கு புதுவை தி. மு. கழகக் கட்டிடத்தில் தோழர் செ. கோவிந்தராசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் பொ. குப்புசாமி, இரா. தொல்காப்பியன், கோ. இராமச்சந்திரன், மு. இறைவிழியன், கோ பாண்டியன், கோ. தென்னன், பி. வி. கண்ணன் ஆகியோர் சொற்பொழிவாற்றியதும், கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சண்டக்காம்பாளையம்
(நாரை வட்டம்)

20—3—55 பகல் 11 மணிக்கு. தோழர் எஸ் ஏ. குமாரசாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தலைவர் தமதுரையில் ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்டித்துச் சொற்பொழிவாற்றினார்.

கள்ளக்குறிச்சி

20-3-55-ல், தோழர் க. வேலாயுதம் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற் குழு உறுப்பினர் கூட்டத்தில், ஐந்தாண்டுத் திட்டக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. துண்டு விளம்பரங்கள் மூலமாகவும் கண்டனம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

குரூர்

20—3—55 மாலை 6 மணியளவில், பெரியார் மைதானத்தில், தோழர் எஸ் கே. கருப்பணன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எஸ் என். அற்புதசாமி, சே. வணங்காமுடி, எஸ். கே. குமாரசாமி, கருப்பணன், ஆர்.எஸ். மணியம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

குள்ளக்காபாளையம்

20—3—55 மாலை 7 மணிக்கு, கழகக் கட்டிடத்தில் தோழர் நாகு தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் பு. கந்தசாமி, சொ. கருப்புசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பொள்ளாச்சி

20—3—55 மாலை 8 மணிக்கு தேர்நிலையில் தோழர் முத்துசாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் ஈரோடு எஸ். அப்பாவு, க துரைக்கண்ணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

வால்பாறை

20—3—55ல், வால்பாறை பஞ்சாயத்துக் காரியாலயத்தின் முன் நடைபெற்ற சுற்றுவட்டார தி. மு. கிளைக் கழகங்களடங்கிய கூட்டத்தில், தோழர்கள் எஸ். எம். ஞானப்பிரகாசம், வி. மாரியப்பன், ஈசாக் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்,

கடையநல்லூர்

20—3—55 இரவு 8 மணியளவில், மறுமலர்ச்சி திடலில் தோழர் ஐ. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் த மு சுல்தான், ஆ திராவிடமணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

வேலூர்

20-3-55ல், வேலூர் கோட்டை வெளியில், தோழர் கோ. கிருட்டிணன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர்கள் பாண்டியன், ஆ மணிஎழிலன், க. செஞ்சோழன், வே. அ. இளஞ்செழியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கவண்டம்பட்டி

20—3—55 மாலை 7 மணிக்கு, தோழர் க. மு வீரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் கு. மாணிக்கம், ப. கலைச்செல்வன், ச. முத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

மாயூரம்

20—3—55 மாலை 6-30-மணிக்கு, கூறைநாடு கடைவீதியில், தோழர் டி. ஏ. இராமசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் முகவை ஆர். எஸ். பாண்டியன் சொற்பொழிவாற்றினார்.

போத்தனூர் (சேலம்)

20—3—55 மாலை, தோழர் இரா. செகநாதன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பேரம்பலம், வி. ஏ. இராமநாதன், இலக்குமணன், வி. கே. இராசு, இரா. சண்முகம், இரா. முத்து, டி. பி. மூர்த்தி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சேவூர் (ஆரணி)

20—3—55 இரவு 8 மணிக்கு, கழகப் பணிமனையில், தோழர் வி. இ. செயராமன் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ரப்ராய்—
(நீலகிரி மாவட்டம்)

20—3—55-ல், தோழர் ஆர். தங்கவேல் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற் குழு உறுப்பினர் கூட்டத்தின்போது தோழர்கள் வே க. வீரபாண்டியன், வே. ஒளியோன், கா. அன்பன் ஆகியோர் ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்டித்துச் சொற்பொழிவாற்றினர்.

பெங்களூர்—சீராமபுரம்

20—3—55 காலை 10 மணிக்கு, கழகக் கட்டிடத்தில், தோழர் செ. விழியன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சு.கண்ணன், கோ. இராசு, சே. ரவிமணி, வ. இலக்குமணன், அ. கணேசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பெங்களூர்-இலக்குமணபுரி

20-3-55 காலை10½ மணிக்கு, தோழர் ஆர். முனிசாமி தலைமையில் நடைபெற்றது. ஜே. ஏசுரத்தினம், ஜி எஸ். கன்னியப்பன், கே. ரேணு, வி. அண்ணாமலை, எஸ். கே. கண்ணன், ஜி. வெங்கடசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சிந்துவில் மேலும் பலர் கைது!

விவாதத்தின்போது சட்டசபை உறுப்பினர் வெளியே தூக்கி எறியப்பட்டார்!

கராச்சி, மார்ச். 25—

சிந்து மாநில அமைச்சர்களைக் கொல்வதற்காக அண்மையில் நடைபெற்ற சதிச் செயல்களும், அதனையொட்டி முன்னாள் முதலமைச்சர் மீர் இலாகி பக்ஷியும், சட்டசபைத் தலைவர் மீர் குலாம் அலி தால்பூர் ஆகியோர் கைது செய்யப்பட்டதும் நினைவிலிருக்கலாம்.

இன்று, மீண்டும், இச்சதிச் செயல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் மூன்று பெரும் புள்ளிகளான மற்றொரு முன்னாள் முதலமைச்சர் காஜி பஸ்லுல்லாவும், மீர் அலி அகமது தால்பூர், மீர்ஜாபர் கான் ஜமாலி எனும் சட்டசபை உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட முன்னாள் முதலமைச்சரான காஜி பஸ்லுல்லா சட்டசபைக்குப் போய்க்கொண்டிருக்கையில் ஐதராபாத்திலும், அடுத்தவர் சட்டசபையிலும், மூன்றுமவர் அவரது வீட்டிலும் வைத்துக் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

காஜி பஸ்லுல்லா, மீர்ஜாபர் கான் ஜமாலி ஆகிய இருவர் சார்பிலும் உடனே சிந்து பிரதம நீதிமன்றத்தில் 'ஹேப்பியஸ் கார்ப்பஸ்' மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. வருகிற திங்கட்கிழமை அன்று அவர்கள் இருவரையும் நீதிமன்றத்தில் கொண்டு வந்து நிறுத்த பிரதம நீதிபதி போலீசாருக்கு உத்திரவிட்டுள்ளாராம்.

சிந்து மந்திரிசபை மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வருவது என்ற நோக்கத்துடன் முன்னாள் முதலமைச்சரான காஜி பஸ்லுல்லாவும், மற்றும் சட்டசபை உறுப்பினர்களும், ஐதராபாத்துக்குப் புறப்பட்டுச் சென்றதாகவும், போலீசார் அவர்களை இடையில் வழிமறித்து நேராக ஐதராபாத் போலீஸ் ஸ்டேஷனுக்கு இட்டுச்சென்று அங்கு, காஜி பஸ்லுல்லாவை மட்டும் கைது செய்து மற்றவர்களை விட்டுவிட்டதாகவும், பின்னர், விடுவிக்கப்பட்ட அந்த சட்ட சபை உறுப்பினர்களில் ஒருவரான மீர் ஜாபர் கான் ஜமாலி அவரது வீட்டில் வைத்து மீண்டும் கைது செய்யப்பட்டார் என்றும் கூறப்படுகிறது.

மேற்படி மூவர்களில் ஒருவரான மீர் அலி அகமத் தால்பூர் என்பவரை ஒரு போலீஸ் அதிகாரி கைது செய்ய அவரது வீட்டுக்குச் சென்றிருக்கிறார்.

சில நிமிடங்களில் வருவதாகக் கூறிவிட்டு, அவர், வீட்டின் புழக்கடை வாயில் வழியாக வெளிவந்து காறில் ஏறி சட்ட சபைக்கு வெகு வேகமாகப் போய்க்கொண்டிருந்தாராம்; இதைக் கண்டுகொண்ட அந்தப் போலீஸ் அதிகாரியும் மற்றொரு காரில் ஏறி அவரைத் துரத்தினாராம்!

காரில் ஓடிவந்த தால்பூர், சட்டசபை நுழைவாயிலில் நின்றுகொண்டிருந்த போலீஸ் அதிகாரி ஒருவரை தள்ளிவிட்டு, சபைக் கட்டிடத்திற்குள் நுழைந்து உட்கார்ந்துகொண்டு, தாம் கைது செய்யப்படாத அளவில் போலீஸ்காரர்களைச் சிறிது நேரம் அலைக்கழித்திருக்கிறார்; ஆனால் இறுதியில் அவர், சட்டசபைக்குள்ளிருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்டு, உடனே கைது செய்யப்பட்டுவிட்டார்!

சட்டசபை அன்று முழுவதும் ஒரே குழப்பமயமாக இருந்ததாகக் கூறப்படுகிறது. சிந்து மாநில ஆளும் கட்சியான முஸ்லீம் லீகிலுள்ள போட்டிக்கட்சிகள் எதிர்ப்புக் கோஷங்களை முழக்கினவாம். சட்டசபைக்கு வெளியே பலத்த போலீஸ் காவல் வைக்கப்பட்டது என்றும், பார்வையாளர்கள் யாரும் உள்ளே அனுமதிக்கப்படவில்லை என்றும் தெரியவருகிறது.

தால்பூர்,குலாம் முஸ்தா புர்காரி ஆகியோர், வரவு-செலவை (பட்ஜெட்) மிக வன்மையாகக் கண்டித்துப் பேசவே, தால்பூர் சட்டசபையிலிருந்து வெளியே 'தூக்கி எறியப்'பட்டாராம்; அதன் பின்னர்தான், அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவநம்பிக்கைத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதை ஆட்சேபிக்கும் வகையில் புர்காரி சட்டசபையைவிட்டு வெளியேறியிருக்கிறார்.

இந்தச் சதிச் செயல்களில் இன்னும் பலர் ஈடுபட்டுள்ளனரென்றும், அவர்களெல்லாம் தலைமறைவாக இருந்து வருகின்றனர் என்றும் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

மீண்டும் அரசியலில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியாயிருக்க முடியும்; எனக்குத் தெரிந்தவரையில், இப்போது அப்படி ஒரு கட்சியும் இல்லை; எனவே, அத்தகைய ஒரு ஒழுங்குமுறையான எதிர்க் கட்சியை உருவாக்க அவர்கள் முயற்சிக்க வேண்டும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

"நான் மீண்டும் அரசியல் வாழ்வில் நுழையப் போவதில்லை; ஆனால், சட்டசபையில் ஒரு நல்ல ஒழுங்குமுறையான எதிர்க்கட்சியிருந்தால், அது,மக்களின் நலன்களுக்குப் பாடுபடுவதானால், அவர்களை நான் ஆதரிப்பேன்," என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

******* **********

தென்னிந்திய சினிமா தொழிலாளர் மாநாடு

28—3—55 காலை 9 மணிக்கு சென்னை கோகலே மண்டபத்தில்

★

மாநாட்டுத் திறப்பாளர்: முதலமைச்சர் திரு. கே.காமராசர்

தலைவர்: டி. எஸ். இராமானுசம்

பேசுவோர்:
எம். பக்தவத்சலம்
என். எஸ். கிருஷ்ணன்
பி. என். நாகி ரெட்டி

* * *

போதுக்கூட்டம்
மாலை 6 மணிக்கு
திருவல்லிக்கேணி கடற்கரையில்

பேசுவோர்:
சி. என். அண்ணுதுரை
ப. ஜீவானந்தம்
எஸ். சி. சி. அந்தோணி பிள்ளை

****

தொழில் அப்பீல் நீதிமன்றங்கள்

'மத்திய தொழிலாளர் அப்பீல் டிரிபியூனலை'யும், சென்னை, இலக்குமணபுரி, கல்கத்தா ஆகிய இடங்களில் உள்ள அதன் கிளைகளையும் மூடிவிடுவது என்று இந்திய சர்க்கார் முடிவெடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அதே நேரத்தில், துரிதமான நியாயம் வழங்குவதை நோக்கமாகக்கொண்டு தொழில் பற்றிய தகராறுகளை யெல்லாம் அப்பீல் உரிமை எதுவுமில்லாமல்; ஒரு டிரிபியூனல் மூலம் தீர்த்துவைப்பதற்கான சில மாறுதல்களும் செய்யப்படுமாம்.

இதனையொட்டி, 1947-ம் ஆண்டு தொழில் தகராறு சட்டத்திற்குத் திருத்தம் ஒன்று, டெல்லி பாராளுமன்றத்தின் நடப்புக் கூட்டத்தில் பிரரேபிக்கப்படுமென்றும், அத்திருத்தம், இந்த ஆண்டு முடிவிற்குள்ளாகவே நிறைவேற்றப்பட்டுவிடும் என்றும் தெரிகிறது.

கழகக் கூட்டங்கள்

கோவிலூர்
பாண்டியனூர் திடலில்
28—3—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: க. வீரபுத்ரன்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
எம். எஸ். இராமசாமி
எஸ். முத்து

★

கள்ளக்குறிச்சி
வள்ளுவர் திடலில்
29—3—55 மாலை 6 மணிக்கு
தலைவர் க. வேலாயுதம்
பேசுபவர்: ஈ. வே. கி. சம்பத்

★

காங்கயநல்லூர்

27—3—55 மாலை 6 மணிக்கு நடைபெறும். தோழர்கள் ஆ மணிஎழிலன், க. நெடுஞ்சோழன், வே. அ. இளஞ்செழியன், வே. சு பாண்டியன், வி. மு. கரிகாலன் ஆகியோர் பேசுவர்.

காஞ்சி மறுமலர்ச்சிக் கழக ஆண்டு விழா

27—3—55 ஞாயிறு மாலை, காஞ்சியில், மேற்படி கழக ஆண்டு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியும், 'ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள்' கூட்டமும், தோழர் சி. வி. எம். அண்ணாமலை தலைமையில் நடைபெறும். பொதுச் செயலாளர் அண்ணுதுரை, தோழர்கள் எம். பி. சுப்பிரமணியம், கே. டி. எஸ். மணி ஆகியோர் பேசுவர்.

இரவு 9 மணிக்கு அய்யம் பேட்டை தி. மு. கழகத்தினர் நடிக்கும் 'பரப்பிரம்மம்', 'வழக்கு வாபஸ்' நாடகங்கள் நடைபெறும்.

தி. மு. கழக கிளைத் தேர்தல்

27-3-55 காலை 10 மணிக்கு, திருப்பூர் நகர தி. மு. கழகத் தேர்தல், வாலிபாளையம், 39-ம் எண்ணுள்ள புதிய கட்டிடத்தில் நடைபெறும்.

* * *

27-3-55 மாலை 3 மணிக்கு, மாயூரம் தி. மு. கழகத் தேர்தல் மாயூரம், முசாபரி பங்களாவில் நடைபெறும்.

திண்டிவனம் நகர தி. மு. க உறுப்பினர்கட்கு

27—3—55 மாலை 4 மணிக்கு, திண்டிவனம் நகர தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம், கழகக் கட்டிடத்தில் நடைபெறும். அதுபோது கழகத் தேர்தலும், கழக நடவடிக்கைகள் பற்றியும் தீர்மானிக்கப்படும்.

சென்னை மாநில ஆரம்பப் பள்ளி மானேஜர், ஆசிரியர் மானேஜர் முதல் மாநாடு

27—3—55 காலை 9 மணிக்கு, சென்னை, பார்க் டவுன், மெமோரியல் மண்டபத்தில், டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, எம். எல் ஏ., தலைமையில் நடைபெறும். முதலமைச்சர் கே. காமராஜ நாடார் மாநாட்டைத் திறந்து வைப்பார்.

நிகழ்ச்சி நிரல்: வரவேற்புரை—திரு. வ. ஆர். சேஷாசலம்; திறப்புரை—முதன் மந்திரி கே. காமராஜ நாடார்; தலைவர் முன்னுரை; காலஞ்சென்ற திரு. சி. ஆர் நமச்சிவாய முதலியார் படத்திறப்பு—திரு எஸ் இராமசாமிநாயுடு; திரு. கே. இராமானுஜம் பிள்ளை படத்திறப்பு—திரு. எஸ் ஜி ரங்கராமானுஜம்; மற்றும் பலர் பேசுவர். இத்துடன் காலை நிகழ்ச்சி முடிவு பெறும். மாலை நிகழ்ச்சி 2 மணிக்கு ஆரம்பம்: தீர்மானங்கள்; தலைவர் முடிவுரை; காரியதரிசிகள் நன்றி கூறல்; நாட்டு வாழ்த்து.

சென்னை சட்டசபையில்....

★

குடும்பக்கட்டுப்பாடு

குடும்பக்கட்டுப்பாடு திட்டங்களுக்காக, மத்திய சர்க்காரின் நிதி உதவியைச் சேர்த்து, சென்னை சர்க்கார் மொத்தமாக ரூ. 51,000 அனுமதித்துள்ளதென்றும், இதைக்கொண்டு 8 'கிளினிக்'குகள் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும், ஆயினும் இத்திட்டம் கிராமப்புறங்களுக்கு விரிவாக்கப்பட இன்னும் கொஞ்ச காலம் பிடிக்குமென்றும் சென்னை சட்டசபையில், அமைச்சர் ஏ. பி. ஷெட்டி அறிவித்தார்.

குடும்பக்கட்டுப்பாடுத் திட்டங்களுக்குப் பெருமளவில் பணம் செலவிடப்பட்டு வருகிறது என்றும், இதனால் நல்ல பலன் ஏற்படுவது நிச்சயம் என்றும், இம்முறை, மோநாடுகளிலெல்லாம் நல்ல பலனைத் தந்துள்ளதென்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

வாழ்க்கைத்தரத்தின் உயர்வுக்காக, ஐந்தாண்டுத் திட்டங்கள் இருப்பதால், ஒரு குடும்பத்தின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துவிட்டால், அங்கு குழந்தை பிறப்புகளும் குறைந்துவிடும் என்றும் கூறியிருக்கிறார்!

"குழந்தைகள் பிறக்காமலிருப்பதற்கு இலவசமாக 'ஆபரேஷன்' செய்து தருவதை சர்க்கார் கவனிக்குமா?" என்று ஒரு உறுப்பினர் கேட்டபோது, அதற்கான உரிமை உள்ளவர்களுக்கு அது தரப்படும் என்றும், தற்போது கடைப்பிடிக்கப்பட்டுவரும் கருத்தடை முறை அபாயமில்லாததே என்றும் அமைச்சர் கூறினார்.

விற்பனை வரி விலக்கு?

பால் வினியோகக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை வரி விதிப்பிலிருந்து விதி விலக்களிப்பது தனிப்பட ஆரசாங்கத்தின் கவனத்திலிப்பதாக சட்ட சபைக் கூட்டத்தில் அமைச்சர் மாணிக்கவேலர் தெரிவித்திருக்கிறார்.

நெசவாளர்களின் நலனுக்காம்!

சென்னை மாநிலத்தில் அதிகமான நூல் நூற்பு ஆலைகளுக்கு அனுமதி தரப்படுவது கைத்தறி நெசவாளரின் நலனுக்காகத்தான் என்றும், மாநிலத்தில் தற்போது நூல் அதிகமான அளவில் உற்பத்தி செய்யப்படவேண்டிய தேவை இருந்துவருகிறது என்றும் அமைச்சர் பக்தவத்சலம் கூறியிருக்கிறார்.

விசைத்தறிகளுக்கு அனுமதி தரப்படக்கூடாது என்பதே மத்திய சர்க்காரின் கொள்கை என்றும், மாநில சர்க்கார் வற்புறுத்தி வருவதும் அதைத்தான் என்றும் ஒரு கேள்விக்குப் பதிலளித்துப் பேசிய அவர் கூறினார்.

இரகசியமானவையாம் — வெளியிட இயலாதாம்!

சென்னை மாநில உற்பத்தித் தேவை உபரியாக இருப்பது, விலை நிலைமை ஆகியவற்றைக் கவனித்து வெங்காயம், மிளகாய் ஆகியவற்றின் ஏற்றுமதிக் கோட்டாவை அதிகரிக்க, சென்னை சர்க்கார், மத்திய சர்க்காரிடம் வற்புறுத்தியிருப்பதாக சட்டசபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வெங்காயம், மிளகாய் ஏற்றுமதிக் கோட்டாவின் நிர்ணயம், அளவு, உபரியாக இருப்பது, மேலும் எவ்வளவு ஏற்றுமதி செய்யலாம் என்பது பற்றிய மாநில சர்க்காரின் சிபாரிசுகளெல்லாம் இரகசியமானவையாதலால் பொது மக்களின் நலனைக் கருதி அவற்றைத் தற்போது வெளியிட முடியாதென்று அமைச்சர் பக்தவத்சலம், சட்டசபைக் கேள்வி நேரத்தில், கேள்வி ஒன்றுக்குப் பதிலாகக் கூறியிருக்கிறார்.

சென்னை சட்ட (மேல்) சபையில்

பதிவு செய்யப்பட்ட 'ரௌடி'கள்!

தென்னாற்காடு மாவட்டத்தில், சென்ற ஆண்டில், கடலூர்—7; திண்டிவனம்—4; பண்ருட்டி—4; விழுப்புரம்—8; சிதம்பரம் நகரம்—5; சிதம்பரம் தாலுகா—5; விருத்தாசலம்—9; திருக்கோயிலூர் 7; கள்ளக்குறிச்சி—2; ஆக மொத்தம் 51 பேர் பதிவு செய்யப்பட்ட 'ரௌடி'களாக இருந்தனர் என்ற தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நெய்வேலியில் கண்ணாடிப் பொருள் உற்பத்தி?

ஆந்திரப் பிரிவினைக்கு முன்னர் கூடூரில், கண்ணாடிப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை சென்னை சர்க்கார் நடத்திவந்ததென்றும், ஆந்திர மாநிலம் பிரிந்ததும், அத்தொழிற்சாலை ஆந்திர சர்க்கார் கையில் சென்றுவிட்டதென்றும், அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்தார்.

தற்போது, தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள நெய்வேலியில் அதுபோன்ற கண்ணாடிப் பொருள்கள் உற்பத்தி 'யூனிட்டு'கள் அமைப்பது பற்றி யோசிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மதச் சார்பற்ற சர்க்காரின் போக்கு!

சீர்செய்து புதுப்பிக்கப்பட வேண்டியகோவில்கள், அறநிலையக் கட்டிடங்கள் ஆகியவை பற்றிய பட்டியலை தயாரித்து வருவதாகவும், அறநிலைய பாதுகாப்புக் கமிஷனரிடமிருந்து இதுபற்றிய அறிக்கை ஒன்றைச் சர்க்கார் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாயும், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்தார்.

ஆராய்ச்சியில்தானே?

பித்தளை, தாமிரம் போன்ற உலோகத் தகடுகளைக்கொண்டு குடிசைத் தொழில்கள் அமைக்கும் பிரச்சினையை சர்க்கார் ஆராய்ந்து வருவதாக அமைச்சர் பக்தவத்சலம் கூறினார்.

துப்பாக்கியைப் பறித்த சட்டசபை உறுப்பினர்

சபைத் தலைவரிடம் எதிர்க் கட்சி தலைவர் முறையீடு

ஒரிசா மாநில சட்டசபையைச் சேர்ந்த உறுப்பினரொருவர், சட்டசபையைக் காவல் புரிந்து கொண்டிருந்த போலீசாரிடமிருந்து துப்பாக்கியைத் தட்டிப் பறித்ததாகவும், அதுபற்றி சபைத் தலைவர் விசாரிக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் கூறியிருக்கிறார்.

"அந்த உறுப்பினர் சற்று மூளைக்கோளாறு உடையவரானல் அவர் தொடர்ந்து உறுப்பினராயிருக்கக்கூடாது; அவரது மனோநிலை சரியாகத்தான் இருக்கிறதா என்பதை டாக்டர்களைக் கொண்டு பரிசோலிக்கலாம்; இதுபற்றி தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்றும் அவர் கோரியிருக்கிறார்.

சபைத் தலைவரும் இதுபற்றி விசாரணை செய்வதாகக் கூறியிருக்கிறாராம்.

நினைவு நாள்

"எனது வாழ்க்கைத் துணைவியார் தோழியர் என். ருக்மணி அம்மையார் நினைவு நாளை முன்னிட்டு, 27-3-55 காலை 9 மணிக்கு அவரது உருவப் படஊர்வலமும், காலை 10 மணிக்கு காசிமேடு மைதானத்தில் டாக்டர் எம். ஏ. கரீம், எம்.சி., தலைமையில் சமாதி திறப்பு விழாவும் நடைபெறும்," என்று இராயபுரம் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகத் துணைத் தலைவர் தோழர் சுப்பிரமணியம் அறிவிக்கிறார்,

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: சி என். அண்ணாதுரை எம். ஏ